வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.103/12

வழக்கு சாட்சி - அ.சா.10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளஞ்செழியன் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.23

**( 2, 3** எதிரிகள் இறந்துவிட்டனர்**. 1, 6, 10, 11** எதிரிகள் ஆஜர் இல்லை**. 1, 6, 10, 11** எதிரிகள் சார்பில் கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**. 4, 5, 7, 8, 9** எதிரிகள் ஆஜர்**.)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.9.10ம் தேதி தேனி மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்த போது வழக்கின் வாதி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.58/10 இதசபிரிவு 468, 471, 419, 420 , 120(பி) ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். சாட்சிகள் கோதையம்மாள், ராஜாராம் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.30மணிக்கு முத்துதேவன்பட்டி பஸ்டாப்பில் வைத்து வழக்கின் எதிரி செல்வம் என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன். இந்தவ ழக்கின் தொர்பான விபரங்களை கேட்டு கோட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பினேன். பின்பு பணிமாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பினை ஆய்வாளர் வசம்ஒப்படைதேன்.. புகார் மனு அசாஆ.6. முதல் தகவல் அறிக்கை அசாஆ.7.

**1, 6, 10, 11, 4, 5, 7, 8, 9** எதிரிகள் தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.